# IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, CUDDALORE.

## O.S.No. 298 Of 2019

| | | |
|---|---|---|
| **Witness Rank** | **:** | DW1 |
| **Name of the Witness** | **:** | சிவசுப்பிரமணியன் |
| **Father's Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Occupation** | **:** | |
| **Address** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 20th day of April, 2026.

வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை :-

எனது பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பிரமாணவாக்குமூலத்தில் உள்ள 7வது பக்கத்தில் 2வது பத்தியில் "வாதிகள் தாக்கல் செய்துள்ள வாதுரையின் 5 ஆம் பத்தியில் வாதிகள் எனது வாரிசுகள் என்பதால் அவர்களுக்கு எனது மூதாதையர் சொத்துக்களின் உரிமை உள்ளது என்று கூறுவது முற்றிலும் தவறான சங்கதிகள் ஆகும்" என்ற விவரம் தவறானது என்றால் சரியல்ல. எனது மகன் வினய் 12 வது வகுப்பு தற்போது செல்ல இருக்கிறார். எனது மகள் மீரா ஹாசினி 10 வது வகுப்பு செல்ல இருக்கிறார். எனது மகன் வினய் வள்ளலார் மெட்ரிக் பள்ளியில் படிக்கிறார். 10 ஆம் வகுப்பில் 496 மதிப்பெண் எடுத்ததாக அவனது பள்ளி ஆசிரியர் மூலமாக

தெரிந்துக்கொண்டேன். எனது மகன் என்னிடம் பேச அவரது அம்மா அனுமதிக்கவில்லை. நான் பொய்யாக இந்த விவரத்தை சொல்லுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது பிள்ளைகள் எனக்கு அக்கறை கிடையாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை தவிர வேறு எந்த சொத்துக்களும் என் பெயரிலும் என் குடும்பத்தார் பெயரிலும் இல்லை என்றால் என் அண்ணன் ஏதாவது சொத்துக்கள் வைத்துள்ளாரா என்று எனக்கு தெரியாது. என் பெயரில் இல்லை. என் பெயரில் உள்ள அனைத்து சொத்துக்களையும் எனது அண்ணன் வைத்தியநாதசாமி ( 2வது பிரதிவாதி) பெயருக்கு செட்டில்மெண்ட் செய்து வைத்து விட்டேன். என் பிள்ளைகளுக்கு எந்த சொத்துக்களும் நான் செட்டில்மெண்ட் எழுதவில்லை என்றாலும் அவர்களுக்கு என சொத்துக்கள் எதையும் விட்டு வைக்கவில்லை என்றால் சரிதான். எனது மனைவியான பிள்ளைகளின் தாயார் ஞானசுந்தரி பண்ருட்டி குற்றவியல் நீதிமன்றத்தில் பராமரிப்பு தொகை உத்தரவு பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த உத்தரவை எதிர்த்து நான் மேல்முறையீடு செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். பராமரிப்பு தொகையை நான் செலுத்தி வருகிறேன். சாட்சி இதை தாமாக கூறினார். அவ்வாறு நான் செலுத்திவிட்டேன் என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் தற்போது வரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் பிள்ளைகளுக்கு நான் செட்டில்மெண்ட் செய்து வைக்காதது காரணம் என் மனைவி தகாத உறவு காரணம் தான். நான் பொய்யாக இந்த விவரத்தை கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. இதை ஒரு காரணமாக வைத்து

பிள்ளைகளுக்கு எதுவும் செய்யாமல் ஒரு பொய் வழக்காடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**( வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*

*Sd/-G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*